# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1781/45 - 2012 ඔක්තෝබර් 26 වැනි සිකුරාදා - 2012.10.26

*1781/45 ஆம் இலக்கம் - 2012 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 26 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டம்**

அறிவித்தல்

**கண்ணாடிப் பொருட்கள் உற்பத்தித் தொழில்**

(136 ஆம் அத்தியாயமாகிய) சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் 33 (1) (அ) ஆம் பிரிவின் கீழ் தொழில் அமைச்சர் அவர்களால் செய்யப்பட்டு 1979 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 12 ஆந் திகதிய 58 ஆம் இலக்க வர்த்தமானியில் பிரசுரமான கட்டளையின் வாயிலாக எனக்களிக்கப்பட்டுள்ள அதிகாரத்தினைக்கொண்டு, தொழில் ஆணையாளர் வி. பி. பி. கே. வீரசிங்க ஆகிய நான், அக்கட்டளைச் சட்டத்தின் 33 (2) ஆம் பிரிவின் கீழ், கண்ணாடிப் பொருட்கள் உற்பத்தித் தொழிலில் உள்ள தொழிலாளர்களுக்கு இவ்வறிவித்தலுக்கான அட்டவணையிலே கூறப்பட்டுள்ள நேர வேலைக்கான கீழேல்லைச் சம்பள வீதங்களை நிர்ணயிப்பதற்கு உத்தேசித்துள்ளேன் என அக்கட்டளைச் சட்டத்தின் 28 ஆம் பிரிவின் கீழ் இத்தால் அறிவிக்கின்றேன்.

இவ்வுத்தேசத் தீர்மானத்திற்கான ஆட்சேபனைகள், 2012 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 21 ஆந் திகதி நண்பகல் 12.00 மணி வரைக்கும் சபையின் என்னால் ஏற்றுக்கொள்ளப்படும்.

அத்தகைய ஆட்சேபனை ஒவ்வொன்றும் அவ்வாட்சேபனைக்கான காரணங்களைக் காட்டும் கூற்றொன்றினை உடையதாய் எழுத்துவாயிலாகச் செய்யப்படுதல் வேண்டும்.

வி. பி. பி. கே. வீரசிங்க,
தொழில் ஆணையாளர்.

தொழில் திணைக்களம்,
கொழும்பு 5.
2012, ஒற்றோபர் 16.

**அட்டவணை**

தொழில் ஆணையாளரால் கண்ணாடிப் பொருட்கள் உற்பத்தி தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களின் நேரவேலைக்கான ஆகக்குறைந்த வேதனத்திற்காக 1980ஆம் ஆண்டு யூன் மாதம் 26ஆந் திகதிய 94/6 ஆம் இலக்க, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும், காலத்திற்குக் காலம் வேறுபடுத்தப்பட்டதும் கடைசியாக 2010 ஆம் ஆண்டு மே மாதம் 31 ஆந் திகதிய 1656/10 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தல் மூலம் வேறுபடுத்தப்பட்டதுமான முடிவுகள் அவ்வட்டவணைக்குப் பின்வரும் புதிய பகுதியினை பதிலீடு செய்வதன் மூலம் மேலும் வேறுபடுத்தப்பட வேண்டும் :-

"I ஆம் நிரலிற் குறித்துரைக்கப்பட்டுள்ளவர்களான கண்ணாடிப் பொருட்கள் உற்பத்தித் தொழிலிலுள்ள தொழிலாளர்களுக்குப் பொருத்தமான நேரவேலைக்கான கீழெல்லைச் சம்பள வீதங்கள் அவர்களுக்கெதிராக II ஆம் நிரலில் குறித்துரைக்கப்பட்டுள்ளவாறிருத்தல் வேண்டும்.

**அட்டவணை**

| | நிரல் I<br>தொழிலாளர் வகுப்பு | நிரல் II<br>சாதாரண வேலைநாள் ஒன்றிற்குரிய ஆகக் குறைந்த சம்பள வீதம்<br>ரூ. ச. |
|---|---|---|
| (அ) | ஊதலுருவம் செய்வோர், இயந்திரங்கள் இயக்குவோர் | 510.00 |
| (ஆ) | இயந்திரங்கள் இயக்குவோருக்கு உதவுவோர், குமிழ் உருவம் செய்வோர், வெட்டுவோர், ஊதலுருவம் செய்வோருக்கு உதவுவோரும் சூளையாளருக்கு உதவுவோரும் | 450.00 |
| (இ) | உருக்கி மட்டஞ்செய்வோர், வாயு செலுத்துவோர், அழுத்துநர், குமிழ் உருவம் செய்வோருக்கு உதவுவோர் | 427.50 |
| (ஈ) | கனிஷ்ட குமிழ் உருவம் செய்வோர், உருவத்தினை சமநிலை செய்வோர், கடைச்சற்காரர், எண்ணுவோர் | 412.50 |
| (உ) | கண்ணாடி வெட்டுவோர், சிமினி வெட்டுவோர், மட்டமாக்குவோர். | 397.50 |
| (ஊ) | அடுக்கிக் கட்டுவோர், கொண்டுசெல்வோர் | 375.00 |

**சாதாரண வேலை நாள்**

சாதாரண வேலை நாள் ஒன்றில் அடங்கியிருக்கும் மணித்தியாலங்கள் (உணவுக்கான அல்லது ஓய்வுக்கான மணித்தியாலம் ஒன்று உட்பட)

| | | |
|---|---|---|
| (அ) | சனிக்கிழமை தவிர்ந்த பிற நாட்களில் | 9 மணித்தியாலங்கள் |
| (ஆ) | சனிக்கிழமை நாட்களில் | 6 மணித்தியாலங்கள்" |

11- 377/1

---

**சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டம்**

அறிவித்தல்

**ஆரம்பப் பாடசாலைச் சேவைத் தொழில்**

(136 ஆம் அத்தியாயமாகிய) சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் 33 (1)(அ) ஆம் பிரிவின் கீழ், கௌரவ தொழில் அமைச்சர் அவர்களினால் ஆக்கப்பட்டு 2000 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 21 ஆந் திகதிய 1120/3 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரமான கட்டளையின் வாயிலாக எனக்களிக்கப்பட்டுள்ள அதிகாரத்தினைக் கொண்டு, தொழில் ஆணையாளர் வி. பி. பி. கே. வீரசிங்க ஆகிய நான், ஆரம்பப் பாடசாலை சேவைத் தொழிலில் ஈடுபட்டுள்ள ஆசிரியர்கள், உதவியாளர்கள் தொடர்பாக கீழ்க் காணப்படும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள ஆகக்குறைந்த சம்பள அளவினை அக்கட்டளைச் சட்டத்தின் 33 (2) ஆம் பிரிவின் கீழ் நிர்ணயிப்பதற்கு உத்தேசித்துள்ளேன் என அக்கட்டளைச் சட்டத்தின் 28 ஆம் பிரிவின் கீழ் இத்தால் அறிவித்துக் கொள்கின்றேன்.

இவ்வுத்தேச தீர்மானம் தொடர்பாக காணப்படும் ஆட்சேபனை 2012 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 21 ஆந் திகதி நண்பகல் 12.00 மணி வரைக்கும் என்னால் ஏற்றுக்கொள்ளப்படும்.

அத்தகைய ஆட்சேபனைகள் ஒவ்வவொன்றும் அவ்வாட்சேபனைக்கான காரணங்களைக் காட்டும் கூற்றொன்றினை உடையதாய் எழுத்துவாயிலாகச் செய்யப்படுதல் வேண்டும்.

வி. பி. பி. கே. வீரசிங்க,
தொழில் ஆணையாளர்.

தொழில் திணைக்களம்,
கொழும்பு 05,
2012, ஒற்றோபர் 2.

**அட்டவணை**

தொழில் ஆணையாளரினால் ஆரம்பப் பாடசாலைச் சேவைத் தொழில் தொடர்பாக ஆசிரியர்கள், உதவியாளர்களுடைய நேர வேலைக்கான ஆகக்குறைந்த சம்பளம் தொடர்பாக 2010 ஆம் ஆண்டு மே மாதம் 31 ஆந் திகதிய 1556/10 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலில் காணப்படும் அட்டவணைக்குப் பதிலாக பின்வரும் அட்டவணையைப் பிரதியீடு செய்வதன் மூலம் மேலும் வேறுபடுத்தப்படுதல் வேண்டும் :-

**அட்டவணை**

| "முதலாவது நிரல் (பிரதேசம்) | இரண்டாவது நிரல் (தொழில்) | மூன்றாவது நிரல் (ஆகக் குறைந்த மாதாந்த சம்பளம்) |
|---|---|---|
| | | ரூபா. ச |
| மாநகர சபை எல்லையினுள் | (அ) ஆசிரியர்கள் | 9,750.00 |
| | (ஆ) உதவியாளர்கள் | 7,500.00 |
| நகர சபை எல்லையினுள் | (அ) ஆசிரியர்கள் | 8,740.00 |
| | (ஆ) உதவியாளர்கள் | 6,975.00 |
| பிரதேச சபை எல்லையினுள் | (அ) ஆசிரியர்கள் | 7,050.00 |
| | (ஆ) உதவியாளர்கள் | 5,740.00 |

மேலே (ஆ) குறியீட்டினால் காட்டப்பட்டுள்ள சேவைகளும் மேலே (அ) குறியீட்டினால் காட்டப்பட்டுள்ள சேவைகளுடன் தொடர்புடைய தற்காலிக அல்லது வேறு யாதாயினும் சேவைகள் இருப்பின் அவைகளும் இதில் அடங்கும்".

11- 377/2

---

**சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டம்**

அறிவித்தல்

**பத்திக் தொழில்**

(136 ஆம் அத்தியாயமாகிய) சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் 33 (1)(அ)ஆம் பிரிவின் கீழ் தொழில் அமைச்சர் அவர்களினால் ஆக்கப்பட்டு, 1979 ஆண்டு ஓகத்து மாதம் 03 ஆம் திகதிய 48 ஆம் இலக்க அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட கட்டளை மூலம் தொழில் ஆணையாளர் வி. பி. பி. கே. வீரசிங்க ஆகிய நான், மேற்கூறிய கட்டளைச் சட்டத்தின் 33(2) ஆம் பிரிவின் கீழ் பற்றிக் தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களுக்கு நேர வேலை தொடர்பாக இவ்வறிவித்தலுக்கான அட்டவணையிற் கூறப்பட்டுள்ள ஆகக் குறைந்த சம்பள வீதங்களை நிர்ணயிப்பதற்கு உத்தேசித்துள்ளேன் என அக்கட்டளைச் சட்டத்தின் 28 ஆம் பிரிவின் கீழ் இத்தால் அறிவிக்கின்றேன்.

மேற்கூறிய உத்தேச தீர்மானத்திற்கான ஆட்சேபனைகள் 2012 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 21 ஆந் திகதி நண்பகல் 12.00 மணி வரைக்கும் என்னால் ஏற்றுக்கொள்ளப்படும்.

அத்தகைய ஆட்சேபனை ஒவ்வொன்றும் எழுத்தில் செய்யப்படுதலும் அத்தகைய ஆட்சேபனைகள் எந்த ஏதுக்களின் மீது செய்யப்படுகின்றதோ அந்த ஏதுக்கள் பற்றிய கூற்றொன்றைக் கொண்டிருத்தலும் வேண்டும்.

வி. பி. பி. கே. வீரசிங்க,
தொழில் ஆணையாளர்.

தொழில் திணைக்களம்,
கொழும்பு 5.
2012, ஒற்றோபர் 18.

அட்டவணை

தொழில் ஆணையாளரால் பத்திக் தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களின் நேர வேலைக்கான ஆகக்குறைந்த சம்பள வீதங்கள் தொடர்பாக நிறைவேற்றப்பட்டதும், 1979ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 30 ஆந் திகதிய 64/22 ஆம் இலக்க இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும், காலத்திற்குக் காலம் வேறுபடுத்தப்பட்டுள்ளனவும் 2010 ஆம் ஆண்டு மே மாதம் 31 ஆந் திகதிய 1656/10 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் இறுதியாகப் பிரசுரிக்கப்பட்டுள்ளனவுமான தீர்மானங்கள், அவ்வட்டவணையின் கீழ் காணப்படும் புதிய பகுதியினை இடுவதன் மூலம் மேலும் வேறுபடுத்தப்படுதல் வேண்டும். பத்திக் தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களுக்கு I வது நிரலில் குறிப்பிட்டுள்ள நேர வேலைக்கு உரித்தான ஆகக் குறைந்த சம்பள வீதம் II வது நிரலில் குறிப்பிடப்பட்டுள்ளவாறாதல் வேண்டும்:-

| "நிரல் I | நிரல் II<br>சாதாரண வேலைநாள் ஒன்றிற்குரிய சம்பள வீதம்<br>ரூபா. ச |
|---|---|
| (அ) சித்திரம் வரைவோர், வடிவுருவங்களமைப்போர் | 525.00 |
| (ஆ) வெள்ளாவியிடுவோர், சாயமிடுவோர் | 450.00 |
| (இ) இஸ்திரிக்கையிடுவோர், உருவப்பிரதி செய்வோர், மெழுகிடுவோர் | 412.00 |

சாதாரண வேலை நாள்

சாதாரண வேலை நாள் ஒன்றில் அடங்கியிருக்கும் மணித்தியாலங்கள் (உணவுக்கான அல்லது ஓய்வுக்கான மணித்தியாலம் ஒன்று உட்பட)

| | |
|---|---|
| (அ) சனிக்கிழமை தவிர்ந்த பிற நாட்களில் | 9 மணித்தியாலங்கள் |
| (ஆ) சனிக்கிழமை நாட்களில் | 6 மணித்தியாலங்கள்" |

11 - 377/3

---

**சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டம்**

அறிவித்தல்

**புகையிலைத் தொழில்**

(136 ஆம் அத்தியாயமாகிய) சம்பளச் சபைக் கட்டளைச் சட்டத்தின் 30 ஆம் பிரிவின்படி புகையிலைத் தொழிலுக்கான சம்பளச் சபையானது, அதற்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களைக் கொண்டு இதனகத்தேயுள்ள அட்டவணையிற் குறித்துரைக்கப்பட்டுள்ளவாறான சபையின் முடிபுகளை அவ்வட்டவணையிற் காட்டப்பட்டுள்ளவாறு வேறுபடுத்துவதற்கு உத்தேசிக்கின்றதென மேற்கூறிய கட்டளைச் சட்டத்தின் 28 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய இத்தால் அறிவிக்கின்றது.

மேற்கூறிய உத்தேசத்திற்கான ஆட்சேபனைகள் 2012 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 21 ஆந் திகதி நண்பகல் 12.00 மணி வரை சபையின் தலைவரினால் ஏற்றுக்கொள்ளப்படும்.

அத்தகைய ஆட்சேபனை ஒவ்வொன்றும் எழுத்தில் செய்யப்படுதலும் அத்தகைய ஆட்சேபனை எந்த ஏதுக்களின் மீது செய்யப்படுகின்றதோ அந்த ஏதுக்கள் பற்றிய கூற்றொன்றைக் கொண்டிருத்தல் வேண்டும்.

வி. பி. பி. கே. வீரசிங்க,
தலைவர்,
புகையிலைத் தொழிலுக்கான
சம்பளச் சபை.

தொழில் திணைக்களம்,
கொழும்பு 5,
2012,ஒற்றோபர் 16.

**அட்டவணை**

புகையிலைத் தொழிலுக்கான சம்பளச் சபையினால் ஆக்கப்பட்டு, 1966 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 28 ஆந் திகதிய 14629/6 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ள அறிவிப்பிற்கான அட்டவணையிற் தரப்பட்டுள்ளவையும், காலத்திற்குக் காலம் வேறுபடுத்தப்பட்டுள்ளவையும், 2010 ஆம் ஆண்டு யூன் மாதம் 30 ஆந் திகதிய 1660/35 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரமாகிய அறிவித்தலின் இதனகத்தேயுள்ள அட்டவணையின் குறிப்பிட்டுள்ள முடிபுகள், அவ்வட்டவணையின் II ஆம் பாகத்திற்குப் பதிலாக பின்வரும் புதிய பாகத்தினை இடுவதன் மூலம் மேலும் வேறுபடுத்தப்படுதல் வேண்டும் :-

"சாதாரண வேலை நாளொன்றிற்கான ஊழியரொருவருக்கு (ஆண்/பெண்) கொடுபடவேண்டிய ஆகக் குறைந்த நாட் சம்பளம் 500.00 ரூபா".

11- 377/4

---

**சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டம்**

அறிவித்தல்

**இறப்பர் (தயர், தியூப் உற்பத்தி, தயர் மீளப்புனைதல் உட்பட) பிளாஸ்திக், பெற்றோலியம்
றெசின் பொருட்கள் உற்பத்தித் தொழில்**

(136 ஆம் அத்தியாயமாகிய) சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் 30 ஆம் பிரிவின்படி தமக்களிக்கப்பட்ட தத்துவங்களைக் கொண்டு இறப்பர் (தயர், தியூப் உற்பத்தி, தயர் மீளப்புனைத்தல் உட்பட) பிளாஸ்திக், பெற்றோலியம், றெசின் பொருட்கள் உற்பத்தித் தொழிலுக்கான சம்பளச் சபையானது இதனகத்தேயுள்ள அட்டவணையிற் குறிக்கப்பட்டுள்ளவாறாக சபையின் முடிபுகளை வேறுபடுத்த உத்தேசிக்கின்றதென மேற்கூறிய கட்டளைச் சட்டத்தின் 28 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய இத்தால் அறிவிக்கின்றது.

மேற்கூறிய உத்தேசத்திற்கான ஆட்சேபனைகள் 2012 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 21 ஆந் திகதி நண்பகல் 12.00 மணி வரை சபையின் தலைவரால் பெற்றுக்கொள்ளப்படும்.

அத்தகைய ஆட்சேபனை ஒவ்வொன்றும் எழுத்தில் தெரிவிக்கப்படுவதோடு அவ்விண்ணம் ஆட்சேபிப்பதற்கான காரணங்களைக் காட்டும் கூற்றொன்றைக் கொண்தாயும் இருத்தல் வேண்டும்.

வி. பி. பி. கே. வீரசிங்க,
தலைவர்,
இறப்பர் (தயர், தியூப் உற்பத்தி, தயர் மீளப்புனைதல் உட்பட)
பிளாஸ்திக், பெற்றோலியம், றெசின் பொருட்கள்
உற்பத்தித் தொழில்.

தொழில் திணைக்களம்,
கொழும்பு 5,
2010, ஒற்றோபர் 12.

**அட்டவணை**

இறப்பர் (தயர், தியூப் உற்பத்தி, தயர் மீளப்புனைதல் உட்பட) பிளாஸ்திக், பெற்றோலியம், றெசின் பொருட்கள் உற்பத்தி தொழிலுக்கான சம்பளச் சபையினால் ஆக்கப்பட்டு 1968 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 06 ஆந் திகதிய 14,831 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட அறிவிப்பிற்கான அட்டவணையில் தரப்பட்டு காலத்திற்குக்காலம் வேறுபடுத்தப்பட்டவையும் 2010 ஆம் ஆண்டு யூன் மாதம் 30 ஆந் திகதிய 1660/35 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியின் மூலம் கடைசியாக

வேறுபடுத்தப்பட்டவையுமான தீர்மானங்கள், அவ்வட்டவணையின் II ஆம் பாகத்தில் “மாதமொன்றுக்குக் கொடுக்கப்படவேண்டிய ஆகக்குறைந்த சம்பள அளவு” என்னும் தலையங்கத்தின், கீழ் காணப்படும் பகுதிக்குப் பதிலாகப் பின்வரும் புதிய பகுதியினை பதிலீடு செய்வதன் மூலம் மேலும் வேறுபடுத்தப்படுதல் வேண்டும்:-

“II ஆம் பாகம்

**மாதமொன்றுக்குக் கொடுக்கப்படவேண்டிய ஆகக்குறைந்த சம்பள வீதம்**

| ஊழிய ஆண்டு | தேர்ச்சியற்றோர் ரூ. ச | ஓரளவு தேர்ச்சி உடையோர் ரூ. ச | தேர்ச்சிபெற்றோர் ரூ. ச | தொழிற்பயிற்சி பெறுவோர் தொழில் பயிலுநர் ரூ. ச |
|---|---|---|---|---|
| 1 ஆம் ஆண்டு | 9,315.00 | 9,720.00 | 10,125.00 | 5,520.00 |
| 2 ஆம் ஆண்டு | 9,415.00 | 9,845.00 | 10,275.00 | 5,720.00 |
| 3 ஆம் ஆண்டு | 9,515.00 | 9,970.00 | 10,425.00 | 5,920.00 |
| 4 ஆம் ஆண்டு | 9,615.00 | 10,095.00 | 10,575.00 | 6,120.00” |
| 5 ஆம் ஆண்டு | 9,715.00 | 10,220.00 | 10,725.00 | |
| 6 ஆம் ஆண்டு | 9,815.00 | 10,345.00 | 10,875.00 | |
| 7 ஆம் ஆண்டு | 9,915.00 | 10,470.00 | 11,025.00 | |
| 8 ஆம் ஆண்டு | 10,015.00 | 10,595.00 | 11,175.00 | |
| 9 ஆம் ஆண்டு | 10,115.00 | 10,720.00 | 11,325.00 | |
| 10 ஆம் ஆண்டு | 10,215.00 | 10,845.00 | 11,475.00 | |
| 11 ஆம் ஆண்டு | 10,315.00 | 10,970.00 | 11,625.00 | |
| 12 ஆம் ஆண்டு | 10,415.00 | 11,095.00 | 11,775.00 | |
| 13 ஆம் ஆண்டு | 10,515.00 | 11,220.00 | 11,925.00 | |
| 14 ஆம் ஆண்டு | 10,615.00 | 11,345.00 | 12,075.00 | |
| 15 ஆம் ஆண்டு | 10,715.00 | 11,470.00 | 12,225.00 | |
| 16 ஆம் ஆண்டு | 10,815.00 | 11,595.00 | 12,375.00 | |
| 17 ஆம் ஆண்டு | 10,915.00 | 11,720.00 | 12,525.00 | |
| 18 ஆம் ஆண்டு | 11,015.00 | 11,845.00 | 12,675.00 | |
| 19 ஆம் ஆண்டு | 11,115.00 | 11,970.00 | 12,825.00 | |
| 20 ஆம் ஆண்டு | 11,215.00 | 12,095.00 | 12,975.00 | |
| 21 ஆம் ஆண்டு | 11,315.00 | 12,220.00 | 13,125.00 | |
| 22 ஆம் ஆண்டு | 11,415.00 | 12,345.00 | 13,275.00 | |
| 23 ஆம் ஆண்டு | 11,515.00 | 12,470.00 | 13,425.00 | |
| 24 ஆம் ஆண்டு | 11,615.00 | 12,595.00 | 13,575.00 | |
| 25 ஆம் ஆண்டு | 11,715.00 | 12,720.00 | 13,725.00 | |

11-377/5

---

## சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டம்

அறிவித்தல்

**மேசு வகை உற்பத்தித் தொழில்**

மேசு வகை உற்பத்தித் தொழிலுக்கான சம்பளச் சபையானது (136 ஆம் அத்தியாயமாகிய) சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் 30 ஆம் பிரிவின்படி அதற்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களைக் கொண்டு, இதனகத்தேயுள்ள அட்டவணையிற் குறித்துரைக்கப்பட்டுள்ளவாறான சபையின் முடிவுகளை அவ்வட்டவணையிற் காட்டப்பட்டுள்ளவாறு வேறுபடுத்துவதற்கு உத்தேசிக்கின்றதென அக்கட்டளைச் சட்டத்தின் 28 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய இத்தால் அறிவிக்கின்றது.

மேற்கூறப்பட்ட உத்தேசத்திற்கான ஆட்சேபனைகள் 2012 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 21 ஆந் திகதியன்று நண்பகல் 12.00 மணி வரைக்கும் சபையின் தலைவரால் பெற்றுக்கொள்ளப்படும்.

அத்தகைய ஆட்சேபனை ஒவ்வொன்றும் எழுத்தில் செய்யப்படுதலும் அத்தகைய ஆட்சேபனை எந்த ஏதுக்களின் மீது செய்யப்படுகின்றதோ அந்த ஏதுக்கள் பற்றிய கூற்றொன்றைக் கொண்டிருத்தலும் வேண்டும்.

வி. பி. பி. கே. வீரசிங்க,
தலைவர்,
மேசு வகை உற்பத்தித் தொழிலுக்கான
சம்பளச் சபை.

தொழில் திணைக்களம்,
கொழும்பு 5,
2012, ஒற்றோபர் 12.

## அட்டவணை

மேசுவகை உற்பத்தித் தொழிலுக்கான சம்பளச் சபையினால் ஆக்கப்பட்டு 1966 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 09 ஆந் திகதிய 14725 ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட அறிவிப்புக்கான அட்டவணையில் தரப்பட்டு காலத்திற்குக்காலம் வேறுபடுத்தப்பட்டவாறானவையும், 2010 ஆம் ஆண்டு யூன் மாதம் 30 ஆந் திகதிய 1600/35 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி மூலம் கடைசியாக வேறுபடுத்தப்பட்டவாறானவையுமான முடிவுகள் அட்டவணையில் II ஆம் பகுதிக்கு பதிலாக பின்வரும் புதிய பகுதியினை பதிலீடு செய்வதன் மூலம் மேலும் வேறுபடுத்தப்படுதல் வேண்டும்:-

### "பகுதி II

### ஒரு மாதத்திற்கான ஆகக்குறைந்த சம்பளம்

*தொழிலாளர் வகுப்பு :*

**தரம் I** : பிரதான வேலையாளர் அல்லது தலைவர்கள் பிரிவு மேற்பார்வையாளர் படனம் அடுக்கும் இயந்திரம் இயக்குவோர்.

**தரம் II** : வெள்ளாவித் தொட்டி இயக்குவோர், நீராவிக்கொதிகலமியக்குவோர், கழுவு இயந்திரம் இயக்குவோர், நிறமூட்டும் இயந்திரம் இயக்குவோர், நீரகற்றும் இயந்திரம் இயக்குவோர், மெருகிடும் இயந்திரம் இயக்குவோர், உலர்த்தும் இயந்திரம் இயக்குவோர், இயந்திரம் திருத்துவோர் நுட்பவியலாளர் (பொது நோக்கு) சாயமூட்டுவோர் (ஆண்கள்) பின்னும் இயந்திரம் திருத்துவோர்கள், திரை அச்சிடுவோர், திரை அச்சிடுபொறி வேலையாளர் (பெண்கள்) திரை அச்சீட்டு உதவியாளர், தையல் இயந்திரம் திருத்துவோர்.

**தரம் III** : சீத்தை படலம் இயக்குவோர் (பெண்கள்) வெட்டும் இயந்திரம் இயக்குவோர், மின்சக்தியால் வெட்டும் இயந்திரம் இயக்குவோர் (கையினால்) வெட்டுவோர், தையல் இயந்திரம் இயக்குவோர், சீத்தை கொதிக்கவைக்கும் தொழிலாளர்கள், வெளிறச் செய்யும் வேலையாளர்கள் (ஆண்கள்), பின்னல் இயந்திரம் இயக்குவோர், சீர்ப்படுத்தும் வேலையாளர்கள் (பெண்கள்), நேர்த்தியாக்கும் வேலையாளர்கள் (பெண்கள்), இஸ்திரிகை போடுவோர் (ஆண்கள்), மின்சக்தியால் இஸ்திரிகை போடுவோர், சரிபார்ப்போர் (பெண்கள்), வகைப்படுத்துவோர் (பெண்கள்), கட்டாக்குவோர், கட்டாக்கி முத்திரை அச்சிடுவோர் (பெண்கள்), சப்பாத்து நாடா, பின்னல் கயிறு, பின்னல் நாடா இயந்திரம் இயக்குவோர், செலபேன்பைகளும் அட்டைப்பெட்டிகளும் செய்வோர், சுற்றுமியந்திரம் இயக்குவோர்.

**தரம் IV** : தொழிலைக் கற்போர் அல்லது பயிலுநர் (மேலே குறிக்கப்பட்ட எவராயினும் ஒரு தொழிலைக் கற்போர் அல்லது பயிலுநர் சம்பந்தப்பட்ட வரையில் வேலை பழகும் காலம் 156 வேலை நாட்களைக் கொண்டதாகக் கருதப்படுதல் வேண்டும்).

### மாதமொன்றுக்கான ஆகக் குறைந்த சம்பளம்

| ஊழியர் ஆண்டு | தரம் I | தரம் II | தரம் III | தரம் IV |
|---|---|---|---|---|
| | ரூ. ச | ரூ. ச | ரூ. ச | ரூ. ச |
| 1 ஆம் ஆண்டு | 9,750.00 | 9,360.00 | 8,970.00 | 5,635.00" |
| 2 ஆம் ஆண்டு | 9,900.00 | 9,485.00 | 9,070.00 | |
| 3 ஆம் ஆண்டு | 10,050.00 | 9,610.00 | 9,170.00 | |
| 4 ஆம் ஆண்டு | 10,200.00 | 9,735.00 | 9,270.00 | |
| 5 ஆம் ஆண்டு | 10,350.00 | 9,860.00 | 9,370.00 | |

11- 377/6

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.